விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 037 வள்ளுவர் ஆண்டு 2053 தை 12 செவ்வாய்க்கிழமை (25.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### புதிய அரசியலமைப்பில்
# வடக்கு-கிழக்கு மக்கள் நாட்டம் காட்டவில்லை
### இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் நாட்டம் காட்டவில்லை என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.**

இந்தியா- இலங்கை- சீனா உறவு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்டவை தொடர்பாக தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் மிலிந்த மொரகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொள்ளும்போது அங்குள்ள மக்கள் அரசியலமைப்பில் நாட்டம் காண்பிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடிந்தது. மாறாக அபிவிருத்தியும் வாழ்வாதார வசதிகளுமே அவர்களின் தேவைகளாகக் காணப்படுகின்றன. எனவே அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை முன்னிறுத்தி செயற்படவேண்டியது அவசியமாகும் என்று இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்

15

### கொக்குவிலில்
## பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத வன்முறை குழு ஒன்று நேற்றைய தினம் இரவு பெட்றோல் குண்டு தாக்குதல் நடத்தியுள்ளது.

15

### முல்லைத்தீவில்
## இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி தேறாங்கண்டல் பகுதியில் இளைஞர் ஒருவர் அவரின் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றினுள் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்

15

## சுன்னாகத்தில் விபத்து ஒருவர் உயிரிழப்பு
### மோட்டார் சைக்கிள் கொள்ளையர்களால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்தி வீதி சமிக்ஞை விளக்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் மதுபானசாலையிலிருந்து மோட்டார் சைக்கிளை கொள்ளையிட்டுத் தப்பி ஓடியவர்கள் மோதியே

15

## 13 ஆவது திருத்தம் தொடர்பில் பொது உடன்பாடு அவசியம்
### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தம் தொடர்பில், பொது இறுதி உடன்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 43ஆவது படையணியின் மாநாட்டில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர்

15

### சாவகச்சேரி சங்கத்தானையில்
## ரயில் மோதியதில் மாணவன் மரணம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மாணவன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

15

## நாட்டில் மின்வெட்டு இல்லை
### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சார தடையை ஏற்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

மின்சார சர்ச்சை தொடர்பில் அரச தலைவர் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த போவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இல

15

## மோ. சைக்கிள் விபத்து; 14 வயது மாணவன் பலி
### முறிப்பு முள்ளியவளையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் 14 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இதில் தண்ணீர் ஊற்று தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்ற முறிப்பு முள்ளியவளையைச் சேர்ந்த பிறைசூடி யாழவன் (வயது-14) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

15

## கொரோனா 14 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

[illegible]

15

## எந்த தேர்தல் நடந்தாலும் வெற்றி எங்கள் பக்கம்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு தேர்தல் நடத்தப்பட்டாலும் அதில் ஐக்கிய மக்கள் சக்தியே நிச்சயம் மாபெரும் வெற்றி பெறும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சர் அமுனுகமவுக்கு கொரோனா

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, அவர் தனது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவுக்கும் நேற்று கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

# தேவையில்லாத இடங்களில் அரசை விமர்சிக்காதீர்கள்

## பங்காளிகளிடம் பீரிஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

"அரசின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதற்கு பங்காளிக் கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால், அந்த உரிமையைப் பொருத்தமான இடத்திலேயே பயன்படுத்த வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது.

"பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட கட்சிகள், பொதுவானதொரு இலக்கை அடைவதற்காகப் பொதுவானதொரு வேலைத்திட்டத்தின் கீழ் இணைவதுதான் கூட்டணி அரசாகும்.

அங்கு கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் இருக்க வேண்டியது ஜனநாயகப் பண்பாகும்.

பயணம் தவறெனில் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு பங்காளிகளுக்கு இருக்கின்றது. அதற்காக 'மைக்' கிடைக்கும் இடங்களில் எல்லாம் பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

பாராளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும். அமைச்சரவைக் கூட்டமும் இடம்பெறும். அப்போது விமர்சனங்களை முன்வைக்கலாம். தவறுகளைச் சுட்டிக்காட்டலாம். அதனைவிடுத்து கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் பொதுவெளியில் விமர்சனங்களை முன்வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்றும் தெரிவித்துள்ளார். (ம)

# 3 டோஸ்கள் பெற்றவர்களுக்கே தடுப்பூசிக்கான அங்கீகாரம்

## சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

நாட்டில் இனிவரும் காலங்களில் பூஸ்டர் தடுப்பூசி உள்ளடங்கலாக மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்களே பூரண தடுப்பூசி பெற்றவர்களாக அங்கீகரிக்கப்படுவர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)


## மணமகள் தேவை

கனடாவில் தற்போது வசிக்கும் 1982.03.09ஆம் திகதி பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மெக்கானிக் தொழில் புரிபவருக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 511 2230

இல.391, திருநகர் தெற்கு, கிளிநொச்சி. (C-3618)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமளிப்பு விழாவில் இன்று எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி சௌமியா வினோத்**

BA, PGDE (Merit), M.Ed

அவர்கள் கல்வி முதுமாணி பட்டத்தினை ( M.Ed ) பெற்றுக்கொள்வதையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமை கொள்கிறது.

ஆசிரியர் கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

(9825)



## கோல்டன் ஈகிள் கே.ரீ பிறைவேட் லிமிடட்

### பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் தேவை

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள்**

**பின்வரும் தகைமைகள் உடையவர்கள் நேரடியாக கீழ்வரும் சான்றிதழ்களுடன் அலுவலக நேரம் 9.00 மணிமுதல் 3.00 மணிவரை சமுகமளிக்கவும்.**

1. க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 5 பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும். (தமிழ் அல்லது சிங்களம் மற்றும் கணிதம் உட்பட)
2. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். விசேட பயிற்சியளித்து வேலைக்கு அமர்த்தப்படும்.
   அல்லது
   குறைந்தது 5 வருடங்கள் முன்அனுபவம் இருத்தல் வேண்டும். (காவல்துறை ஏனைய படைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு சேவைகளில்)
3. உயரம் 5' 4" இருத்தல் வேண்டும். மார்பு 32 அங்குலம்.
4. வயது 60ற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
5. தமிழ் அல்லது சிங்களம் சரளமாக பேசக்கூடியதாக இருக்க வேண்டும். ஆங்கில மொழியும் விரும்பத்தக்கது.
6. சொந்தமாக சாரதி அனுமதிப் பத்திரத்துடன் மோட்டார் சைக்கிளும் இருத்தல் வேண்டும்.

### தேவையான ஆவணங்கள்

1. ஆள் அடையாள அட்டையின் பிரதி.
2. பிறப்பு சான்றிதழின் பிரதி.
3. கிராம சேவையாளரின் நற்சான்றிதழ்.
4. கல்விச் சான்றிதழ்களின் பிரதி.
5. அனுபவ சான்றிதழ்களின் பிரதி.
6. சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதி.



(C-3619)

குறிப்பு - சம்பள நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் EPF + ETF மற்றும் மோட்டார் சைக்கிள் பாவித்த பானைக்கான கொடுப்பனவும் வழங்கப்படும். விசேடமாக அவரவர் தரத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 077 054 1323



## கண்ணீர் அஞ்சலி

எமது கிளையின் பிரதி
முகாமையாளர் **வி.சிவபாலன்**
அவர்களின் அன்புத் தாயார்



அமரர் திருமதி
**விஜயகுலசிங்கம் யோகாம்பிகை**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளரும் ஊழியர்களும்**
**மக்கள் வங்கி**
**பிரதான வீதிக் கிளை (104)**
**உரும்பிராய் சேவை நிலையம்**

PEOPLE'S BANK
Pride of the Nation

(9822)



## சிவபூமி அரும்பொருட்காட்சியகம்
## Sivapoomi Jaffna museum

இன்று மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் எமது நிறுவனத்திற்கு ஆதரவு தந்துதவும் அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**அரும்பொருட்காட்சியகம் திறக்கும் நேரம்**
**காலை 9.00 - மாலை 5.30 வரை**

**சிவபூமி அறக்கட்டளை**
தோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில.
021 222 7938, 021 222 7944

**சிவபூமி அரும்பொருட்காட்சியகம்**
இல.50, கண்டி வீதி,
நாவற்குழி.
021 205 2585

(9823)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயக்கமின்றி பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள்

## யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதி

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனைத்து மக்களும் மூன்றாம் கட்ட தடுப்பூசியை கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தெரிவித்தார்**



நேற்று யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கொரோனா பரவல் அதிகரிக்கின்ற நிலையில் மக்கள் அனைவரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஏற்கனவே இராணுவம் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் மூன்றாம் கட்ட தடுப்பூசி யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் பரவலாக பொதுமக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது .

எனவே பொதுமக்கள் தயக்கமின்றி மூன்றாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-33)

# குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

தற்போது நிலவும் வறட்சி யான காலநிலை காரணமாக குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவ தற்கான சாத்தியம் நிலவுகிறது.

இதன் காரணமாக நீரை மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீர சிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி நீரை பயன்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# மணிவிழா வாழ்த்து



திருமதி.

**பத்மினிதேவி சகலகலாநிதி**

சேவை விபரம்

22.03.1990 -12.01.1995

யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

13.01.1995 -06.06.2010

யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்

07.06.2010- இன்று வரை

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

**மணிவிழா வாழ்த்து**

பாடசாலைக் காலமதில்
வரலாற்றுத் தடம் பதித்த- ஆசிரியை
தமிழால் இவர் பெருமை கொள்கிறாரா
இவரால் தமிழ் பெருமை கொள்கிறதா?
என்ற வினாவுக்கு விடை காணமுடியா
தமிழ் விருட்சம் இவர்
நிர்வாகம்,கற்பித்தல்நுட்பம்,
வழிகாட்டும் பாங்கு- என
பன்முகம் காட்டிய மணிவிழா நாயகிக்கு
ஸ்ரீ விஷ்ணுவின் வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்

[9820]

# உயர்தர வகுப்புகளின் இறுதி நாட்களில் பிரியாவிடை நிகழ்வுகளை நடத்த வேண்டாம்

## பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

உயர்தர வகுப்புகளின் இறுதி நாளில் பிரியாவிடை நிகழ்வுகளை நடத்த வேண்டாம் என உயர்தர மாணவர்களிடம் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் எல். எம்.டி. தர்மசேன கேட்டுக் கொண்டுள்ளார்.

பரீட்சை அனுமதிப்பத்திர ங்களை கையளித்த பின்னர் மாணவர்களை எக்காரணம் கொண்டும் பாடசாலைகளில் இருக்க அனுமதி வழங்க வேண்டாம் என்றும் அவர் சகல பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு மாணவர்கள் ஒன்றிணைவதன் மூலம் வைரஸ் அதிகரிக்கக்கூடிய சாத் தியம் உள்ளதை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தர்ம சேன சுட்டிக்காட்டினார்.

2021 ஆம் ஆண்டிற்கான க.பொ.த.உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாம் 7 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 79 அர சியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சட்ட சிக்கல்கள் உள்ள காரணத்தால் பதிவு செய்யப்பட்ட ஆறு கட்சிகள் செயலற்ற அரசியல் கட்சிகளாக தற்போது கருதப்படுகின்றன. கடந்த ஆண்டு பதிவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங் களில் இருந்து மூன்று அர சியல் கட்சிகளை பதிவு செய்ய தேர்தல் ஆணையம் அண் மையில் முடிவு செய்தது.

அதன்படி தமிழ் மக்கள் கூட்டணி, புதிய லங்கா சுதந் திரக் கட்சி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய மூன்று கட்சிகள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# சாவகச்சேரி நகராட்சிமன்றம்

## ஆட்டிறைச்சிக் கடை, கோழி இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் - 2022 (01.02.2022- 31.12.2022)

1. இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம்
2. காலம் :- 31.01.2022 ஆம் திகதி திங்கட்கிழமை
3. நேரம் : -மு.ப.10.30

**இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள் :-**

1. பகிரங்க ஏலத்தில் சித்தி பெறுபவர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும்.
2. ஒப்பந்த காலம் 01.02.2022-31.12.2022
3. இந்நகராட்சி மன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
4. ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புக் கட்டணத்தை அலுவலகத்தில் 31.01.2022 மு.ப.10.00 மணிக்கு முன்னர் செலுத்துவதுடன் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
5. குத்தகை தொடர்பான மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை நகராட்சி மன்றத்தின் கணக்குப் பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**2022 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடை, கோழி இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (01.02.2022- 31.12.2022) | ஆகக்குறைந்த ஏலத் தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 276,850.00 | 3,500.00 |
| 02 | கோழி இறைச்சிக் கடை இல : 01 | 1,130,250.00 | 12,500.00 |
| 03 | கோழி இறைச்சிக் கடை இல : 02 | 1,130,250.00 | 12,500.00 |

குறிப்பு: இந்நகராட்சிமன்றத்தின் இறைச்சிக்கடைகளிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

**திருமதி.சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**25.01.2022.**

(C-3615)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருது அசாமுக்கு



2021 ஆம் ஆண்டிற்கான ஐ.சி.சி.யின் ஆண்களுக்கான சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதினை பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் வென்றுள்ளார்.

27 வயதான பாபர் அசாம் விருதுக்கான ஓட்டப் பந்தையத்தில் ஷாகிப் அல்ஹசன், ஜான்மேன் மலன் மற்றும் பால் ஸ்டெர்லிங் போன்றவர்களை வீழ்த்தி இந்த பெருமையைப்பெற்றுள்ளார்.

பாபர் அசாம் 2021 ஆம் ஆண்டில் ஆறு ஒருநாள் போட்டிகளில் மாத்திரம் விளையாடியுள்ளார். ஆனால் இந்த ஆண்டு பாகிஸ்தான் விளையாடிய இரண்டு தொடர்களிலும் அவர் முக்கிய பங்களிப் பைச் செய்தார்.

பாபர் அசாம் கடந்த ஆண்டு ஆறு போட்டிகளில் விளையாடி இரண்டு சதங்களுடன் 67.50 சராசரியில் 405 ஓட்டங்களை குவித்துள்ளார். (4-6)

# பெப்ரவரி 12, 13 இல் ஐ.பி.எல்.மெகா ஏலம்

2022 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் தொடரை மார்ச் மாதத்தில் நடத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.



இந்த தொடரை இந்தியாவில் நடத்துவதானால் மும்பை நகரத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டாவதாக அஹமதாபாத் நகரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்திற்குள் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் தென்னாபிரிக்கா அல்லது ஐக்கிய அரபு இராச்சியத்தில் போட்டியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பிலான இறுதி தீர்மானம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்திற்கான ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (4-6)



# குழந்தையின் முகத்தை முதன்முறையாக ரசிகர்களுக்கு காட்டிய விராட் தம்பதி

இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி கடந்த 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தனது காதலியும் பாலிவுட் நடிகையுமான அனுஷ்கா ஷர்மாவை திருமணம் செய்தார். இவர்களுக்கு கடந்த ஆண்டு பெண் குழந்தை பிறந்தது.

அக்குழந்தைக்கும் கோலி - அனுஷ்கா தம்பதி வாமிகா என பெயரிட்டனர். வாமிகாவின் புகைப்படங்களை அடிக்கடி சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த அனுஷ்கா சர்மா குழந்தையின் முகத்தை மட்டும் காட்டவில்லை.

எங்கள் குழந்தைக்கு தனியுரிமையை வழங்கவும், ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் இருந்து விலகி அவளது வாழ்க்கையை சுதந்திரமாக வாழ வாய்ப்பளிக்கவுமே அவரது முகத்தை வெளியிடவில்லை என அனுஷ்கா சர்மா கூறியிருந்தார்.

இந்நிலையில், தற்போது வாமிகாவின் புகைப்படம் முதன் முதலாக வெளியாகியுள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அரைச்சதம் அடித்த கோலி, தனது குழந்தைக்கு அர்ப்பணிக்கும் வகையில் தாலாட்டு சைகை செய்தார். அப்போது பெவிலியனில் இருந்த அனுஷ்கா சர்மா தனது மகள் வாமிகாவுடன் இணைந்து கைதட்டி ஆரவாரம் செய்தார். அப்போது தான் வாமிகாவின் முகத்தை ரசிகர்கள் முதன் முதலில் பார்த்தனர்.

நேரலையின் போது, ஒளிபரப்பான அந்தக் காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (4-6)

# முதலாம் ஆண்டு நினைவு நாள் பிரார்த்தனை



அமரர்

## க.செ.சத்தியமூர்த்தி

(தாவடி)

மண் மகிழ
11.03.1948

மனம் நெகிழ
05.02.2021

உங்கள் முகம் காணவில்லை
உங்கள் குரல் கேட்கவில்லை
உங்களுடன் ஒருநாள்கூடப் பழகியதில்லை
ஆனாலும். நீங்கள் வாழும் காலத்தில்
வாழ்ந்த வாழ்க்கையையும்
உதவி என்று வருவோருக்கு முகம் கோணாமல்
நீங்கள் செய்த உன்னத சேவைகளையும்
அறிந்து வியப்புறுகின்றேன்!

உங்கள் கடை மகளை
கைத்தலம் பற்று முன்னர்
நீங்கள் சென்றது எங்கே?
"மாமா" என்று உரிமையுடன் இனி யாரை அழைப்பேன்?
உங்கள் பிரிவால் வாடும் அன்பு மனைவி, பிள்ளைகளைத்
தேற்றிட வார்த்தைகளைத் தேடுகின்றேன்
அவர்களுடன் இணைந்து முதலாம் ஆண்டு நினைவு நாளில்
உங்கள் ஆத்மசாந்திக்காய் எல்லாம்வல்ல
இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

(C-3621)

ம்பிரான்,
யாழ்ப்பாணம்.

தகவல்:- செ.ரவிசாந் (இளைய மருமகன்),
ஊடகவியலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானுக்கான இலங்கை தூதரகம் மூடல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் இயங்கிய இலங்கை தூதரகத்தை மூட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் காணப்படும் நிச்சயமற்ற அரசியல் நிலைமை மற்றும் பாதுகாப்பு நிலைமையின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது.

தூதரகத்தின் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பாடசாலைகளில் அதிகரிக்கும் கொரோனா பரவல் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எனவே, மூடப்பட்ட இடங்கள் மற்றும் சிறிய வகுப்பறைகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹண தெரிவித்தார். புத்தளத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிறைய மாணவர்கள் மற்றும் போதிய இடவசதி இல்லாத வகுப்பறைகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் இது கொத்தணிகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவதானமாக இருந்தால் இவ்வாறான நிலைமையை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 300 கிலோ கிராம் ஹெரோயினுடன் ஆறு பேர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து கடத்தி கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் 300 கிலோ கிராம் ஹெரோயினுடன் ஆறு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் தெற்கு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நேற்று இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தலுக்காக சந்தேக நபர்கள் பயன்படுத்திய இழுவைப் படகும் அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (6)


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

## இரகுநாதன் தையல்நாயகி



திதி : அட்டமி (25.01.2022)

பிறப்பு: 13.01.1936

இறப்பு: 05.02.2021

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
அகலுமா உன் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு அகலவில்
லை ஆத்மா
சாந்தியடை
இறைவனை பிராத்திக்கும்

முதலியார் வீதி
யாழ்ப்பாணம்

பிள்ளைகள்
சகோதரர்கள்

(9421)



# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-05, இராஜசிங்கம் வீதி, 27 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சவரிமுத்து பெண் சந்தானம் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 01.05.2004 ஆம் திகதியிடப்பட்ட 2228ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் குருநகர் இராஜசிங்கம் வீதி, இல.25 முகவரியைச் சோந்த திருமதி. திரேசம்மா பெனடிக்ற் தனது மகள் இராஜரட்ணம் அன்ரன் ஜசிந்தாவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். எனினும் குறித்த 2228ம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் குறிப்பிடப்படாது 1967 ஆம் ஆண்டு தன்னால் இதன் உறுதிகள் யாவும் கடந்த இடம்பெயர்வுகளின் போது தவறிவிட்டனவென்றும் எனினும் இது எனது கொள்வனவும் ஆட்சியானதுமானதுமென குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் குறித்த இராஜரட்ணம் அன்ரன் கைம்பெண் ஜசிந்தா பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 02.09.2019 ஆம் திகதியிடப்பட்ட 1120ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை தனது மகள் திருமதி.மேரி அக்னஸ்ரவிக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/75 குருநகர் இறை "பறையன் வளவு" விஸ்தீரணம் குளி 11.4 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்கள் 28.03.2013 ஆம் திகதி தயாரித்த 3158ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 01 எனச்சுட்டப்பட்டபடியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் குளி (11.20) பதினொன்று தசம் இரண்டு சைபரும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை.

கிழக்கு:- ஜூலியற் அஞ்சலாவின் ஆதனம்.

வடக்கு :- கதிர்காமு மகாலிங்கத்தின் ஆதனம்.

மேற்கு : பெனடிற்மரியதாஸின் ஆதனம்.

தெற்கு :- இராஜசிங்கம் வீதி இதடங்கலும்.

தற்போது திருமதி.மேரி அக்னஸ்ரவி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திருமதி.மேரி அக்னஸ்ரவி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-3616)


# இராசிபலன்

25.01.2022
தை 12, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 3.23 மணிவரை

சித்திரை முற்பகல் 8.31 மணிவரை
சுபநேரம் - 11.06-12.36 மணிவரை
இராகுகாலம் -3.36-5.06 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்திரட்டாதி

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.




பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது [illegible] கூடும்.




திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு ஒரு சுதந்திரப் பறவை. அது விரும்புகின்ற இடத்தில் கூடு கட்டும்.

# ஆளுநர் செயலகத்திற்கு முன் தொண்டராசிரியர்கள் கவனயீர்ப்பு




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று வட மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிக்கையில்,

நாங்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம். கடந்த 21 ஆம் திகதி அமைச்சினால் கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள கடிதத்தில் 60 தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளார்கள் என்றும் அவர்களது நியமனம் தொடர்பாக ஆராயுமாறும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாணத்தில் 210 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளோம்.

அனைத்து தொண்டர் ஆசிரியர்களின் பெயர்களும் அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என நாங்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே உரிய அதிகாரிகள் எமது நிலையை கருத்தில் கொண்டு எமக்கான நியமனத்திற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4-5-33-104)

# பாரிய அச்சுறுத்தலில் தமிழர் பண்பாடு

## மாநகர முதல்வர் சுட்டிக்காட்டு



(குப்பிழான்)

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எங்கள் மண்ணில் கலைகளும், பண்பாடுகளும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. எங்கள் கலைகளையும், பண்பாடுகளையும் உயிரோடு வைத்திருந்தவர்களை நாங்கள் உத்தமர்களாகவே கொண்டாடியிருந்தோம்.

அதற்குப் பின்னரான சூழ்நிலையில் எங்கள் கலைகள், பண்பாடுகள் மற்றும் மரபுரிமைகளின் இருப்புக்களுக்குப் பாரியதொரு அச்சுறுத்தலும், கேள்விக்குட்படுத்தப்படும் நிலைமையும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்களுடன் இணைந்து யாழ்.மாநகர சபை முன்னெடுத்த காணும் பொங்கல் விழா- 2022 நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். பண்ணைக் கடற்கரையில் சிறப்பாக இடம்பெற்றது.

விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்மக்கள் இழந்து போகின்ற அல்லது அழிந்து போயுள்ள பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும், மரபுரிமைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது எங்களின் கட்டாய கடமையாக வுள்ளது.

எங்களின் பாரம்பரியங்களும், கலைகளும் அழிவை எதிர் நோக்குகின்றதொரு இக்கட்டானதொரு காலகட்டத்தில் நாங்கள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18)

# படகை ஏலம் விடுவதை மத்திய அரசு தடுக்கவேண்டும்

## இந்திய மீனவர்கள் கோரிக்கை



(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்களின்படகை இலங்கை அரசு ஏலம் விடுவதை மத்திய அரசு தடுக்க வேண்டும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், படகையும் விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றாத பட்சத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஓட்டர் ஐடி, ஆதார் கார்டு உள்ளிட்ட அரசின் ஆவணங்களை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தமிழகத்தை சேர்ந்த இராமேஸ்வரம், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதியில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடித்தொழிலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு கடற்படை முகாம்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 105 படகுகளை இலங்கை அரசு ஏலம் விடப் போவதாக அறிவித்துள்ளது.

இதையடுத்து நேற்று இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீன்பிடி துறைமுகத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர். இதில் இலங்கை கடற்படையால் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட 105 தமிழக படகை ஏலம் விடுவதை மத்திய அரசு தடுக்க வேண்டும்.

சிறையில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வேண்டும். மேலும் கடந்த 19ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்க சென்ற இராமேஸ்வரம் பகுதி மீனவரின் படகை இலங்கை கடற்படை முட்டி மோதி மூழ்கடித்ததை விரைந்து மீட்பு குழுவினர் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் வருகின்ற 2ஆம் திகதிக்குள் மேலே குறிப்பிட்ட தீர்மானங்களை மத்திய அரசு நிறைவேற்றாத பட்சத்தில் வருகின்ற 2 ஆம் திகதி முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் ஆதார் கார்டு, ஓட்டர் ஐடி உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் ஒப்படைத்து இந்திய பிரஜை இல்லை என தெரிவிக்கப் போவதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். (4-5-33)



தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் பங்குபற்றுதலுடன் நாடு தழுவிய ரீதியில் கலைஞர்களுக்கான கௌரவிப்பு நேற்று முன்தினம் கோண்டாவிலில், இடம்பெற்றது. அவுஸ்திரேலிய மற்றும் இலங்கையின் நட்புறவை மேம்படுத்தும் அமைப்பினால் உருவாக்கப்பட்ட சுருதிலயா சேத்திரம் கலை அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமிதேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முகவிலாச மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன். சுந்திரவேல் "மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்" என்னும் விடயப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (4-5)

# பாடசாலை மாணவர்களை மோதிவிட்டு தப்பிச் சென்றது பேருந்து

## நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை மோதித் தள்ளிவிட்டு தனியார் பேருந்து ஒன்று தப்பிச்சென்ற சம்பவம் நேற்று நீர்வேலியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது,

நீர்வேலி பூதவராயர் மடம் பகுதியில் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் தனது பிள்ளை உள்ளிட்ட இருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற வேளை, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து அவர்கள் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் மாணவர்கள் இருவரும் அழைத்துச் சென்ற பெண்ணும் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில், அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு கோப்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-18-33)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெறவுள்ளமையினால் அனைத்து சைவப்புலவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வழங்கும் திட்டத்தின் உதவித்தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சொந்த வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் வசிப்போருக்கு குறைந்த விலையில் வீடு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்காலிக வீடுகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இந்த வேலைத் திட்டத்தின் கீழ் 6 இலட்சம் ரூபாய் உதவி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த உதவித் தொகையை 50 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்குமாறு வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு யோசனை முன்வைத்தார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு இந்த வருடம் முதல் தலா 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்படுகின்றது.(நி-5)

# பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாக்கத் தீர்மானம்



(கொழும்பு)

பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி, மூன்றாம் டோஸை கட்டாயமாக்குவதற்கு ஐரோப்பிய நாடுகளிலும் பல்வேறு வளர்ந்த நாடுகளிலும் இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக சுகாதார அமைச்சரிடமும் சட்டமா அதிபரிடமும் ஆலோசனையைப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)





## இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம்
## பண்ணிசை- உயர் சான்றிதழ் கற்கை நெறி-2022
## (இணையவழி (Zoom) மூலமான பயிற்சி

ஆன்மிக முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் தெய்வீகக் கலை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டு தனிமனிதர்களது ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் உன்னத பணியில், உங்களை இணைத்துக் கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பம்

**பயிற்சி நெறி உள்ளடக்கம்**

- பன்னிரு திருமுறைகள் பற்றிய முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்
- அடிப்படை ஆன்மிக வாழ்வியல் நெறிக்கு வேண்டிய திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு ஓதுவார்கள் பாடும் முறைப்படி பாடுவதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல் (மரபு வழியான பண்ணிசைப் பயிற்சி)
- சமய வழிபாடுகளின்போது திருமுறைகளை முறையாகப் பண்ணோடு பாடுவதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல்
- திருமுறைப் பாடல்களை மாணவர்கள் பண்ணோடு பாடுவதற்கான பயிற்சி அளிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்

**இலக்குக் குழு / பயிற்சி பெறுநர்கள்**

- இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்

**பயிற்சி நெறி விபரம்**

- பயிற்சி நெறி ஆரம்பம் - 11 பெப்ரவரி 2022
- பயிற்சிக்காலம் - 9 மாதங்கள் (180 மணித்தியாலங்கள்)
- பயிற்சித் தினங்கள் - வார இறுதி நாட்கள் (சனி மற்றும் ஞாயிறு)
- பயிற்சி முறைமை - இணையவழி (zoom) மூலமான வகுப்புகள்

**கற்கைநெறி தொடர்பான பதிவுகளுக்கு**

- **திரு.ம.செந்தூரன்**
  அபிவிருத்தி உத்தியோகத்தர்
  0714402318, 0762038128
  இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
  வடமாகாணப் பிராந்திய அலுவலகம்.
  695, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248-1/1 காலி வீதி , கொழும்பு - 04




## இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம்
## யோகாசனம்- உயர் சான்றிதழ் கற்கை நெறி-2022

ஆன்மிக முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் தெய்வீகக் கலை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டு தனிமனிதர்களது ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் உன்னத பணியில், உங்களை இணைத்துக் கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பம்

**பயிற்சி நெறி உள்ளடக்கம்**

- யோகக்கலை தொடர்பான கோட்பாடுகள் மற்றும் தத்துவம் பற்றிய புரிதல், மனித உடற்கூறியல், உடல்நலம், உளநலம், சுகாதாரம், உணவுமுறை பற்றிய பூரணமான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- யோகப் பயிற்சிகளுக்கான தயாரிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் பற்றிய பூரணமான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- சூரிய நமஸ்காரம் மற்றும் பல்வேறு யோக நிலைகள் மற்றும் பிராணாயாமம் என்பவற்றில் பயிற்சி மற்றும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல்.
- மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்கான மனதை ஒருமுகப்படுத்தும் தியானம் மற்றும் யோகநிலைகள் என்பவற்றில் பயிற்சி மற்றும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல்.
- மன அழுத்த முகாமை மற்றும் உளநலம் தொடர்பான விடயங்களில் அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவை தொடர்பான விசேட யோக நிலைகளில் பயிற்சி மற்றும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல்.
- யோகக்கலையின் ஒருங்கிணைந்த அணுகுமுறை யின் பயன்பாடுகளை அறிந்து கொள்வதுடன் பயிற்சி அளிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

**இலக்குக் குழு / பயிற்சி பெறுநர்கள்**

- ஆர்வலர்கள் மற்றும் இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்.

**பயிற்சி நெறி விபரம்**

- பயிற்சி நெறி ஆரம்பம் - 5 பெப்ரவரி 2022
- பயிற்சிக் காலம் - 09 மாதங்கள் (180 மணித்தியாலங்கள்)
- பயிற்சித் தினங்கள் - வார இறுதி நாட்கள் (சனி மற்றும் ஞாயிறு)

**கற்கைநெறி தொடர்பான பதிவுகளுக்கு**

- **திருமதி. க. சிவமணி**
  அபிவிருத்தி உத்தியோகத்தர் - 0779117954
  இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
  'குருகுலம்' - பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
  யாழ்ப்பாணம்.

**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248-1/1 காலி வீதி , கொழும்பு - 04

(C-3617)




## இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம்

ஆன்மிக முன்னேற்றத்திற்கும் மன ஒருமைப் பாட்டுக்கும் ஆரோக்கிய வாழ்விற்கும் வழிகாட்டும் தெய்வீகக் கலைகளைப் பயில்வதற்கான சந்தர்ப்பம்

**யோகாசனம்- அடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறி-2022**

**பயிற்சி நெறி உள்ளடக்கம்**

- யோகக்கலை தொடர்பான கோட்பாடுகள் மற்றும் தத்துவம் பற்றிய புரிதல், மனித உடற்கூறியல், உடல்நலம், சுகாதாரம், உணவுமுறை பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- யோகப் பயிற்சிகளுக்கான தயாரிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- சூரிய நமஸ்காரம் மற்றும் அடிப்படை யோக நிலைகள் மற்றும் பிராணாயாமம் என்பவற்றில் பயிற்சி மற்றும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல்.

**இலக்குக் குழு / பயிற்சி பெறுநர்கள்**

- இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்

**பண்ணிசை- அடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறி-2022**

**பயிற்சி நெறி உள்ளடக்கம்**

- பன்னிரு திருமுறைகள் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்
- திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல்
- சமய வழிபாடுகளின்போது திருமுறைகளை (பஞ்சபுராணம்) முறையாகப் பண்ணோடு பாடுவதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல்

**இலக்குக் குழு / பயிற்சி பெறுநர்கள்**

- இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்

**பயிற்சி நெறி விபரம்**

- பயிற்சி நெறி ஆரம்பம் - 05 பெப்ரவரி 2022
- பயிற்சிக் காலம் - 06 மாதங்கள். (120 மணித்தியாலங்கள்)
- பயிற்சித் தினங்கள் - வார இறுதி நாட்கள் (சனி மற்றும் ஞாயிறு)

**குறிப்பு:** வயலின்,மிருதங்கம் என்பவற்றிலும் பயிற்சி அளிக்கப்படும். பயில விரும்புபவர்கள் தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**கற்கைநெறி தொடர்பான பதிவுகளுக்கு**

- **திருமதி. க. சிவமணி**
  அபிவிருத்தி உத்தியோகத்தர் - 0779117954
  இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
  'குருகுலம்' - பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
  யாழ்ப்பாணம்.

**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248-1/1 காலி வீதி , கொழும்பு - 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய குடியரசு தின விழாவில் 12 ஊர்திகளுக்கு மட்டுமே அனுமதி

## தமிழக ஊர்திகளுக்கு அனுமதி மறுப்பு



(டில்லி)

குடியரசு தினத்தையொட்டி டில்லியில் நாளை நடைபெறவுள்ள குடியரசு தின விழா அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் இடம்பெறவுள்ளன.

இதையொட்டி டில்லி ராஜ பாதையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒத்திகையில் 12 மாநிலங்களின் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழகம், கேரளா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களின் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது பெரும் அரசியல் விவாதத்தை எழுப்பியிருக்கிறது.

இந்த விடயத்தில் மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாக அந்த மாநிலங்கள் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இரண்டு ஆண்டுகளில் முதல்முறையாக கொரோனா ஊரடங்கை அறிவித்துள்ள நாடு

(சிட்னி)

உலகில் பல நாடுகளும் கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்றால் பல சிரமங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்கை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

ஆனால் கிரிபாடி என்ற சிறிய நாடு, முதல் முதலாக கொரோனா ஊரடங்கை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து சுமார் 4,800 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இந்த சிறியதீவில் 1.2 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். கடந்த வாரம் வரை இந்த தேசத்தில் இருவருக்கு மட்டுமே கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை, பிஜி நாட்டிலிருந்து புறப்பட்ட விமானத்தில் பயணித்த 54 பேரில் 36 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணித்த அனைவரும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கிரிபாடி மக்கள் அத்தியாவசியத்தேவைகள்தவிர வேறு காரணங்களுக்கு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5)

# பாக். உச்ச நீதிமன்றின் முதல் பெண் நீதிபதி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக ஆயிஷா மாலிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் வரலாற்றில் உச்சநீதிமன்றத்தில் ஒரு பெண் நீதிபதியாக நியமிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். (நி-5)

# தலிபான்களுடன் மேற்கு நாடுகளின் அதிகாரிகள் முதல் முறையாக பேச்சுவார்த்தை

(ஒஸ்லோ)

ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான நிலைமை மோசமடைந்துள்ள நிலையில், தற்காலிக வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முட்டாகி தலைமையிலான தலிபான் குழு, மேற்கத்திய அதிகாரிகள் மற்றும் ஆப்கானிஸ்தான் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமான இந்த பேச்சுவார்த்தைகள், மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும். (நி)

# ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் நியூசிலாந்து பிரதமரின் திருமணம் ரத்து



(வெலிங்டன்)

புதிய கொவிட் கட்டுப்பாடுகளை அறிவித்ததையடுத்து, நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தனது திருமணத்தை ரத்து செய்துள்ளார்.

ஒமிக்ரோன் பிறழ்வு வெடிப்பிற்கு பிறகு முழு நியூசிலாந்தும் மிகவும் உயர்ந்த அளவிலான கொவிட் கட்டுப்பாடுகளின் கீழ் உள்ளது.

நிகழ்வுகளில் கலந்து கொள்ள தடுப்பூசி போடப்பட்ட 100 பேருக்கு அனுமதி மற்றும் கடைகள், பொது போக்குவரத்தில் முகக்கவசம் அணிதல் ஆகிய கட்டுப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே [illegible] க்காட்சி தொகுப்பாளரான கிளார்க் கேபோர்ட் உடனான தனது திருமணம் நடைபெறாது என்பதை ஜெசிந்தா ஆர்டர்ன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் உறுதிப்படுத்தினார்.

ஒன்பது ஒமிக்ரோன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து புதிய கட்டுப்பாடுகள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது. நியூசிலாந்தில் இதுவரை 15 ஆயிரத்து 104 கொரோனா [illegible] ளன. (நி-5)

# தடுப்பூசி செலுத்தாதவர்கள் குடியரசு தின நிகழ்வில் பங்கேற்கத் தடை



(டில்லி)

கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத்வர்கள் குடியரசு தின விழாவில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நாளை நடைபெற உள்ள குடியரசு தின விழாவை முன்னிட்டு சில கட்டுப்பாடுகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அதில், "15 வயதுக்குட்பட்ட சிறுவர்- சிறுமிகள், 2 தவணை கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் குடியரசு தின விழாவில் பங்கேற்க அனுமதி இல்லை.

விழாவுக்கு வரும் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

மேலும் உரிய வகையில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. (நி-5)

# உக்ரேய்னில் பதற்றம்

## தமது தூதரக ஊழியர்களை வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவு

(கீவ்)

உக்ரேய்னில் உள்ள தமது தூதரக ஊழியர்களை, குடும்பங்களுடன் வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, அங்கு பணியாற்றி வரும் அத்தியாவசிய பணிகளில் அல்லாத ஊழியர்கள் வெளியேற அமெரிக்க உள்துறை அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், உக்ரேய்னில் உள்ள அமெரிக்க குடிமக்களும் வெளியேறுவதைப் பரிசீலிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

உக்ரேய்ன் மீது குறிப்பிடத்தக்க நடவடிக்கையை மேற்கொள்ள ரஷ்யா திட்டமிட்டுள்ளதன் பின்னணியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆனால், உக்ரேய்னை ஆக்கிரமிக்கும் திட்டம் எதுவும் தமக்கு இல்லை என்று ரஷ்யா தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகிறது.

உக்ரேய்ன் கிழக்கு எல்லைப் பகுதியில், ரஷ்யா சுமார் ஒரு இலட்சம் படையினரை நிறுத்தியுள்ளது. மேலும், நவீன ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் நிலை நிறுத்தியுள்ளது.

படையினரை நிலை நிறுத்தியது தொடர்பாக இதுவரை ரஷ்யா போதிய விளக்கமளிக்கவில்லை என்றும் கூறியுள்ளது அமெரிக்கா.

மேலும், உக்ரேய்ன் மீது ரஷ்யா படையெடுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கராச்சியில் ஏற்பட்ட புழுதிப்புயல் இந்தியா நோக்கி நகர்வதாக அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கராச்சியில் ஏற்பட்ட புழுதிப்புயல் ராஜஸ்தான், குஜராத் மாநிலத்தை நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மும்பை உள்ளிட்ட புறநகர் பகுதியில் புழுதிப்புயலால் காற்று மாசு அதிகரித்துள்ளதாகவும் காற்றின் தரக்குறியீடு 300 இற்கு மேல் அதிகமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த புயலின் தாக்கம் 12 மணி நேரம் வரை இருக்க வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளதுடன், மும்பையில் வெப்பநிலை குறைந்து குளிர்ந்த காற்று வீசக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கை நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு

## கட்டுப்படுத்தக்கோரி மகஜர் கையளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட முரசுமோட்டை பகுதியில் உள்ள பயிர்ச் செய்கை நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டரீதியற்ற மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் உள்ளிட்டோருக்கு அண்மையில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இரசாயன உரம் மற்றும் களை நாசினிகள் இல்லாத நிலையில் அதிகூடிய விலைகளில் அவற்றைப் பெற்று பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள வயல் நிலங்களில் நெல்லை அறுவடை மேற்கொள்வதற்கு முன்னரே இவ்வாறு பயிர்களை அழித்து சட்டவிரோத மணல் மேற்கொள்ளப்படுவதுடன் அறுவடை செய்யப்படாத வயல் நிலங்களிலும் நெற்பயிர்களைச் சேதப்படுத்தி பாதைகள் அமைத்து சட்டவிரோத மாக மணல் ஏற்றும் வாகனங்கள் கொண்டு செல்லப் படுகின்றன என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்த போதும் இதில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும் பிரதேச விவசாய பொது அமைப்புக்களும் சுட்டிக்காட்டின. இந் நிலையிலேயே மேற் படி மகஜர் கமக்கார அமைப்பினர், பிரதேச பொது அமைப்புக்கள், விவசாயிகளால் கையளிக்கப்பட்டன. (4-5-315)

# ஆசிகுளத்தில் யானை அட்டகாசம் ஒரு ஏக்கர் வயல் நாசம்



(நெளுக்குளம்)

வவுனியா ஆசிகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த காணிக்குள் புகுந்த யானை அங்கிருந்த நெற் செய்கையை மிதித்து துவம்சம் செய்துள்ளது.

ஆசிகுளம் வயல் பகுதியில் தொடர்ச்சியாக யானையின் பாதிப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்படும் நிலையில் நேற்று முன்தினம் இரவும் யானை ஒரு ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலத்தை சேதப்படுத்தியுள்ளது.

பசளை இன்மையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்போது யானையின் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-5-299)

# கனியவள அகழ்வுக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வு பதாகைகள்




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோரப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கனியவள அகழ்வு மற்றும் ஆய்வுகளை உடனடியாக நிறுத்தக் கோரி மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பின் ஒழுங்கமைப்பில் பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் கடற்கரையோரங்களில் காணப்படும் மணல்களில் மிகவும் விலை உயர்ந்த அரிதான தைத்தனியம் எனும் கனிமம் அதிகளவு காணப்படுகிறது.

குறித்த தைத்தனியத்தை அகழ்வு செய்யும் பணிகள் சட்டவிரோதமாக இடம்பெறுவதை தடுக்கக் கோரி குறித்த விழிப்புணர்வு பதாகைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. (4-5-285)

# புதையல் அகழ முற்பட்ட எழுவர் கிளிநொச்சியில் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் பகுதியில் புதையல் அகழ்வதற்காக இரண்டு வாகனங்களில் வந்த ஏழு பேர் கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து புதையல் தேடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கைதானவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் என்று தெரிய வந்துள்ளது.

இராமநாதபுரம், சம்புக்குளம் பகுதியில் புதையல் அகழ வந்ததாக அவர்கள் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-100-316)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது சூட்சுமமான ம்றையில் மணல் டிப்பர் வாகனமொன்றில் மறைத்து வைத்து கடத்தப்பட்ட 4 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான 24 தேக்கு மரக் குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன் சந்தேக நபர் ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டீ.எம். சதுரங்க தெரிவித்தார். (4-5-316)

# மூலிகை பண்ணைக்கு யானை வேலி அமைத்துத் தரவும்

## பண்ணை நிர்வாகம் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவ மூலிகை பண்ணைக்கான யானை வேலியை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுப் பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத மூலிகை பண்ணையில் பல்வேறு ஆயுர்வேத மருத்துவ குணம் கொண்ட பயிர்கள் வளர்க்கப்பட்டு வரும் நிலையில் குறித்த பண்ணையில் யானைகளின் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. குறிப்பாக பெருமளவான அரிய மூலிகைகளையும் அழித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

எனவே ஆயுர்வேத மூலிகைப்பண்ணை வளாகத்தைச் சுற்றி வேலி அமைத்துத் தருமாறு ஆயுர்வேத மூலிகை பண்ணை நிர்வாகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-315)



யாழ்.மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்களுடன் இணைந்து யாழ்.மாநகர சபை முன்னெடுத்த காணும் பொங்கல் விழா-2022 நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் யாழ். பண்ணைக் கடற்கரைப் பகுதியில் சிறப்பாக இடம்பெற்றது. விழாவில் யாழ்.மாநகர சபையினர், மாநகர வர்த்தகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுமார் 50 பானைகளை வைத்துப் பொங்கியதுடன் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள், சிறப்பு நிகழ்வுகள், போட்டிகள் எனப் பல நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் உதவியை நாடவுள்ள இலங்கை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இலங்கை எதிர்நோக்கும் சில பிரச்சினைகளை தீர்க்க ஜப்பானின் உதவியை நாடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜப்பானிய தூதரகத்துடன் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையின் பார்வையை மற்ற நாடுகளுக்கு முன்வைப்பதிலும் விளக்கமளிப்பதிலும் ஜப்பான் ஏற்கனவே அதன் பங்கை ஆற்றியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானிய கலாசாரம் காட்டும் பச்சாதாபம், இரக்கம், மென்மை மற்றும் ஒருமித்த கருத்து ஆகியவற்றின் காரணமாக ஜப்பான் அதைச் செய்யத் தகுதி பெற்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## ரஞ்சனுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள இரண்டாவது வழக்கின் விசாரணைக்காக அவர் நேற்று திங்கட் கிழமை நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வரை நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் இரண்டாவது விசாரணை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்க விற்கு நான்கு ஆண்டு கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சூரிய நாராயண பூஜை



ஆன்மிக மாதமான மார்கழியில் ஒவ்வொரு நாட்களும் விரத நாட்களாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்த மாதத்தில் விரதம் இருந்தும், நோன்பு நோற்றும் இறைவழிபாடு செய்தவர்களுக்கு தை மாதம் பலன் கிடைப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

தை மாதம் முதல் திகதியன்று சூரியன் மகர இராசியில் பிரவேசிக்கின்றார். இதை மகரசங்கராந்தி என்று அழைப்பர். அதுவரை தெற்கு திசையில் பயணித்து வந்த சூரியன், தனது பயணத்தை தைமாத பிறப்பன்று வடக்கு திசையை நோக்கி தொடங்குகிறார். இதை உத்தராயண புண்ணியகாலம் என்பர். உத்தராயணம் என்றால் வடக்குப் புறமான வழி என்று பொருள்.

இக் காலம் தேவர்களுக்கு பகல் பொழுதாகும். சுபகாரியங்கள் செய்வதற்கு உத்தராயண காலமே சிறந்தது. வயலும், வயல் சார்ந்த இடமுமான, மருத நிலத்துக்குரிய தெய்வம் இந்திரன். உலக பயிர்கள் சுபீட்சமாக வாழ மழையைத் தருவது சூரியன். நிலத்தை உழுவதற்கு பயன்படுவது மாடுகள். இவர்களை நன்றியுடன் நினைத்து 3 நாட்கள் மக்கள் விழா எடுத்து மகிழ்கின்றனர்.

இந்திரனுக்கு 'போகி' என்று பெயர் உண்டு. பொங்கலுக்கு முந்தினம் இந்திரன் பெயரால் போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. பொங்கலன்று சூரியனை நாராயணராக கருதி வழிபாடு செய்கின்றனர். இதுவே சூரிய நாராயண பூஜையாகும்.

அன்று பொங்கலிட்டு வழிபாடு செய்வார்கள். இது முற்காலத்தில் சூரிய விழா என்றே அழைக்கப்பட்டது. பொங்கலிடுவதிலும் சில விதிமுறைகள், வரை முறைகள் இருக்கின்றன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த 20 நாட்களில் 53,791 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தற்போது நாட்டிற்கு சராசரியாக 3,000 சுற்றுலாப் பயணிகள் தினமும் வருகை தருவதாகவும் முதல் 20 நாட்களில் இலங்கைக்கு வந்த பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## முன்னாள் பிரதியமைச்சரின் மகன் போதைப் பொருட்களுடன் கைது

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்பின் மூத்த புதல்வர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அவரிடமிருந்து 150 மில்லிகிராம் ஹெரோயின் , 170 மில்லிகிராம் ஹசிஸ் போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபரை திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## பாரவூர்தி- மோ.சைக்கிள் விபத்து ஒருவர் மரணம்

(புத்தளம்)

புத்தளத்தில் பார ஊர்தியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு புத்தளம் கல்லடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பார ஊர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 370 | 450 |
| உருளைக்கிழங்கு | 165 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 400 |
| தக்காளி | 160 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 50 |
| கோவா | 200 | 220 | 240 |
| கரட் | 420 | 440 | 450 |
| பூசணி | 130 | 140 | 200 |
| புடோல் | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 350 | 300 | 500 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 240 | 220 | 300 |
| பீற்றூட் | 350 | 360 | 400 |
| கறிமிளகாய் | 500 | 550 | 700 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 |
| போஞ்சி | 400 | 360 | 600 |
| கத்தரிதம்புள்ள | 380 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 270 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 220 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 90 | 70 | 60 |
| வல்லாரை | 15 | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | 60 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.**

அத்துடன், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சுமார் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி இந்த விடயத்தினைத் தெரிவித்தார்.

நாளாந்தம் ஒட்சிசனை நம்பியிருக்கும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 8 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பாரிய மோசடிகளை அம்பலப்படுத்தியவர் வெளிநாடு செல்ல தடை விதிப்பு

(கொழும்பு)

பாரிய மோசடிகள் தொடர்பில் அம்பலப்படுத்திய நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்தன வெளிநாடு செல்ல முயற்சித்த போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

வியாபார நோக்கமொன்றிற்காக தாம் அமெரிக்காவிற்கு பயணம் செய்ய கட்டுநாயக்க விமான நிலையம் சென்ற போது தம்மை அதிகாரிகள் தடுத்து நிறுத்தியதாகத் தெரிவித்தார்.

வழக்கு ஒன்றுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் இதனால் நாட்டை விட்டு வெளியேற முடியாது எனவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தம்மிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

சதொச நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரியளவிலான வெள்ளைப்பூண்டு மோசடி மற்றும் எரிவாயு சேர்மானம் தொடர்பிலான சர்ச்சை போன்ற பல்வேறு விடயங்களில் துசான் குணவர்தன அம்பலப்படுத்தியிருந்தார்.

வெலிசர நீதிமன்றில் தமக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக விமான நிலையத்தில் அதிகாரிகள் குறிப்பிட்டதாக அவர் தெரிவித்தார். எனினும் தமக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளமை தொடர்பில் எவ்வித அறிவிப்பும் இது வரையில் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு தமக்கு வெளிநாடு செல்ல தடை ஏற்படுத்திய அனைத்து அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராகவும் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்ய உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்தன தெரிவித்தார். (நி-5)

# தன்னிச்சையாக அதிகாரத்தை கைப்பற்ற அரசாங்கம் முயற்சி - ஜே.வி.பி.சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டு வருடங்கள் நீடிக்கப்பட வேண்டும் என சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனை தெரிவித்தார்.



கடந்த இரண்டு வருடங்களில் பொதுமக்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்த கருத்து மூலம் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களுக்காக பணியாற்றத் தவறிவிட்டது என்பது தெளிவாகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மாணவர்களுக்கான கல்வியை நாசமாக்கியதுடன் விவசாயிகளுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியதோடு மரக்கறிகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தியது.

தற்போதைய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவோ நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலோ வெற்றி பெறாத நிலையில் தற்போது தன்னிச்சையாக அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கிறது என சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சாட்டினார். (நி-5)

# லயன் குடியிருப்பில் தீ விபத்து வீடு முற்றாக எரிந்து நாசம்



(ஹற்றன்)

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லயன் குடியிருப்பில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகின.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## மற்றவர்களின் மறுபக்கம்

நாய் நன்றியுள்ள பிராணிதான். ஆனால் அதன் வாலைக் கிள்ளுபவர்களை அது கடிக்காமல் விடாது. கிள்ளியவன் தொட்டுத் தூக்கி வளர்த்த எஜமானனாலும் சரி.

உங்களிடம் நெருங்கிப் பழகிக்கொண்டிருப்பவர்கள் உங்களுக்கு மிக நல்லவர்களாகத் தெரியலாம். ஆனால் அவர்களது மறுபக்கம் பயங்கரமானது; சுயநல மிக்கது; ஏமாற்றக் காத்திருப்பது; கொடுமையும் கோபமும் நிறைந்தது.

மற்றவர்களிடம் வேண்டுமென்றே ஒரு பெரிய உதவியைக் கேளுங்கள். அல்லது அவர்களது வேண்டுகோளை வேண்டுமென்றே நிராகரியுங்கள்.

அவர்களைக் கோபித்துக் கொள்ளுங்கள். அல்லது கோபமூட்டுங்கள்.

இப்போது அவர்களைப் பாருங்கள். மெல்லச் சுயரூபத்தை வெளிப்படுத்தித் தங்களது உண்மையான நிறத்தை உங்களுக்குக் காட்ட ஆரம்பிப்பார்கள்.

அப்படியானால் இவ்வளவு நாட்கள் அவர்கள் காட்டிய மரியாதை, அன்பு பிரியமெல்லாம்?

போலியானவை, தற்காலிகமானவை என்று சொல்லலாம். புலித்தோல் போர்த்திய பசுக்களைப் போன்றவை என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மனித எண்ணங்கள் விகாரமானவை. வக்கிரம் பிடித்தவை. புற்றுநோய்க் கிருமிகள் போன்று இரக்கமற்றவை. புழுத்து வடியும் பூச்சிகளைக் காட்டிலும் அருவருப்பானவை. இத்தகைய கொடிய உருவங்களை உள்ளடக்கி உறவு என்றும் நட்பு என்றும் விதவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு போலியான காட்சிகளை மற்றவர்கள் தோற்றுவிக்கிறார்கள்.

இத்தகைய தடைகளை அணிந்து கொண்டு அவர்கள் நம்மை அணுகுவதால் நமக்கு அதிர்ச்சி இருப்பதில்லை. முன் பின் தெரியாதவர்கள் அல்லது வேண்டாதவர்கள் முன் இத்தகைய தடைகளை அவர்கள் களைந்து எறிவதால் அவர்கள் தாக்குதலடைகிறார்கள்.

எதிரியை ஈவு இரக்கமின்றிச் சுட்டு வீழ்த்தும் ஓர் இராணுவ வீரர் தன் மனைவி, மக்களிடம் அன்பு காட்டுவது மேற்கூறிய அடிப்படையிலேயே ஆகும்.

மனிதனை மனிதனாகவே காண்பதும் அவனை மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள வைப்பதும் நம்மிடம் தான் இருக்கிறது. எப்படி?

மற்றவர்களது அடிப்படையான உணர்வுகளை நாம் சீண்டிவிடாமல் இருக்க வேண்டும். மாறாக, அவர்கள் போக்கிலேயே விட்டுப்பிடித்துக் காரியங்களைச் சாதிக்க வேண்டும்.

அதோடு அவர்களையுடைய பொல்லாத உணர்வுகளுக்குத் தீனியிட்டு வளர்க்கும் செயலைச் செய்யாதிருக்க வேண்டும். அதாவது தவறுகளைச் செய்யக் கூடிய சந்தர்ப்பங்களை நாமே அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காதிருக்க வேண்டும்.

ஏற்படுத்திக் கொடுத்தோமானால் அவர்கள் மிருகமாகத்தான் மாறுவார்கள்.

மின்சாரத்தைப் பாதுகாப்புடன் பயன்படுத்திக் கொள்வதை விட்டு விட்டு அதைத் தொட்டுப் பார்த்து அதன் தன்மை என்ன என்பதை அறிய முயலும் முயற்சியை போன்றதே மற்றவர்களின் மறுபக்கத்தைச் சோதிப்பது.

அது பயங்கரமானது. இதில் எள்ளத்தனையும் உங்களுக்கு ஐயம் வேண்டாம்.

இதை விட்டு விட்டு "மற்றவர்கள் இப்படி நடந்து கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கவே இல்லை" என்று புலம்புவது அறிவீனம்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## முட்டாள் ராஜாவும் முட்டாள் மந்திரியும்

முன்னொரு காலத்தில் முட்டாள்ராஜா என்பவன் இருந்தான். தன்னைப் போலவே முட்டாளை அமைச்சராக்கினான். அரசனுக்குத் திடீரென்று வேட்டைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

"அரசே! இதுவரை யாரும் காட்டிற்குச் சென்று எலி வேட்டையாடியதில்லை. எல்லா வேட்டைகளிலும் கடினம் எலி வேட்டைதான்.

அதே சமயம் ஆபத்தும் இல்லாதது. நீங்கள் மட்டும் வெற்றி வீரராகத் திரும்பினால் இந்த உலகமே உங்களைப் பார்த்துப் புகழும்," என்றான் முட்டாள் அமைச்சன். அரசனும் இதை ஏற்றுக் கொண்டான்.

"நான் வேட்டையிலிருந்து திரும்பும் வரை ஆட்சியைக் கவனித்துக் கொள்," என்று சொல்லிவிட்டு வீரர்கள் புடைசூழ எலி வேட்டைக்குப் புறப்பட்டான் அரசன்.

மறுநாள் அரண்மனை அந்தப்புரத்திலிருந்த அரசியை நல்ல பாம்பு ஒன்று கடித்து விட்டது. மயங்கி விழுந்த அரசியைச் சோதித்த மருத்துவர்கள், "நஞ்சு தலைக்கு ஏறி விட்டால் அரசி உயிர் பிழைப்பது கடினம்,"என்றனர்.

இந்தச் செய்தி உடனே அமைச்சனுக்குத் தெரிவிக்கப்பட்டது. என்ன செய்வது என்று சிந்தித்தான் அவன். அருமையான யோசனை அவனுக்குத் தோன்றியது.

வீரர்களைப் பார்த்து, "பாம்பின் நஞ்சு அரசியின் தலைக்கு ஏறுவதற்குள் அரசியாரின் தலையை வெட்டிப் பாதுகாப்பிற்காக வையுங்கள்.

எப்படி அரசியார் இறக்கிறார் என்று பார்த்து விடுகிறேன்," என்று கட்டளையிட்டான். வீரர்களும்



அரசியின் தலையை வெட்டித் தனியே வைத்தனர்.

அரசியாரைக் கடித்த பாம்பை அடிக்க வீரர்கள் விரட்டிச் சென்றனர். ஆனால், அந்தப் பாம்பு ஒரு வீட்டிற்குள் புகுந்து மறைந்து கொண்டது. உள்ளே நுழைய வீரர்கள் பயந்தனர். நடந்ததை அறிந்த அமைச்சன், "அந்த வீட்டைக் கொளுத்துங்கள். பாம்பு சாகட்டும்," என்று ஆணையிட்டான்.

உடனே வீடு கொளுத்தப்பட்டது. நாலாபுறமும் காற்று வீசிக் கொண்டிருந்ததால் தீ தலைநகர் முழுவதும் பிடித்துக் கொண்டது. ஊர் மக்கள் எல்லோரும் அலறினர்.

"கவலைப்படாதீர்கள்" என்ற அமைச்சன் நகரத்தின் நீர் தேவைக்காக இருக்கும் ஏரியை உடைத்து விடச் சொன்னான்.

அதேபோல் ஏரி உடைக்கப்பட்டது. ஏரி நீர் நகரத்திற்குள் புகுந்து தீயை அணைத்தது. "தன் அறிவுக்கூர்மையால் மக்களின் துன்பத்தைப் போக்கி விட்டோம்" என்று மகிழ்ந்தான் அமைச்சன்.

அவன் மகிழ்ச்சி ஒரு நாள் கூட நீடிக்கவில்லை. "ஏரியில் நீர் இல்லாததால் நெற்பயிர்கள் வாடுகின்றன" என்று மக்கள் முறையிட்டனர்.


"எதனால் பயிர் வாடுகிறது?" என்று கேட்டான் அமைச்சன். "சூரியனுடைய வெப்பத்தைத் தாங்க முடியாமல் வாடுகின்றன" என்று பதில் தந்தான் ஒருவன்.

"அப்படியா... "கதிரவனின் கதிர்கள் பயிரைத் தாக்காமல் இருக்க நாட்டிலுள்ள மரங்களை எல்லாம் வெட்டிப் பயிர்களுக்குப் பந்தல் போட்டு விடுங்கள்," என்றான். மக்களும் அவ்வாறே செய்தனர்.

இவ்வாறாக முட்டாள் அமைச்சன் மூன்றே நாளில் நாட்டைச் சுடுகாடாக்கி விட்டான். இதற்குத்தான் முட்டாளாக இருக்காதீங்க என்பது. புரிஞ்சுதா குட்டீஸ்!

# மகாபாரதம்

314



அவர்கள் துவாரகையை விட்டுச் சென்றதும் துவாரகை கடலில் மூழ்கியது. அருச்சுனனும் உடன் சென்ற மகளிரும் செல்லச் செல்ல அவர்கள் நீங்கிய நகரங்களும் கிராமங்களும் கடலால் கொள்ளப்பட்டன.

அருச்சுனன் அத்தனை பெண்களையும், குழந்தைகளையும் அழைத்துச் செல்வதைக் கண்ட திருடர்களுக்கு பேராசை உண்டாயிற்று. அவர்கள் ஆயிரக் கணக்கில் அவர்களை வழிமறித்து தாக்கினர். திருடர்களின் துணிச்சலைக் கண்டு அருச்சுனன் நகைத்தான்.

"உயிரின் மீது உங்களுக்கு ஆசை இருக்குமாயின் ஓடி விடுங்கள். இல்லையேல் எனது அம்பினால் கொன்று விடுவேன்" என எச்சரிக்கை செய்தான். ஆனால் திருடர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. பெண்களை மறித்துச் சூறையாடினர். சினம் கொண்ட அருச்சுனன் காண்டீபம் என்னும் வில்லை எடுத்து நாண் ஏற்றி அம்பு தொடுக்க விளைந்தான். ஆனால் காண்டீபம் செயலிழந்து விட்டிருந்தது.

கற்ற மந்திரங்களும் நினைவுக்கு வரவில்லை. கற்ற கல்வியும் கேள்வியும் கடலில் கரைத்த காயம் போலாகின.

வில்லுக்கு விஜயன் என்ற பெயர் போய்விட்டதோ என கலங்கினான். காண்டீபம் செயலிழந்ததும் அம்பறாத் துணியில் அம்புகளும் இல்லையாகின.

யாவும் விதியின் பயன் என உணர்ந்தான். இந்நிலையில் ஏராளமான பெண்களை திருடர்கள் கவர்ந்து சென்றனர். பெரு முயற்சி செய்து எஞ்சியவர்களைக் காத்தான். அவர்களை பொருத்தமான இடத்திலிருக்கச் செய்தான்.

ருக்மணி அக்கினிப் பிரவேசம் செய்தாள். சத்தியபாமாவும் வேறு சிலரும் வனம் சென்று தவ வாழ்க்கை மேற்கொண்டனர்.

கண்ணீரும் கம்பலையுமாய் அருச்சுனன் வியாசரைக்காணச்சென்றான். கண்ணனைப் பிரிந்தது. ஐந்து லட்சம் பேர் ஒருவரை ஒருவர் உலக்கையால் அடித்துக்கொண்டு மடிந்தது எல்லாவற்றையும் கூறி அழுது புலம்பினான்.

வியாசர் அருச்சுனனுக்கு ஆறுதல் சொன்னார். பின்" அருச்சுனா இறந்து போனவர்களைப் பற்றி கவலைப்படாதே. தெய்வ அம்சம் கொண்ட அவர்கள் கடமை முடிந்தது.

அதனால் அவர்கள் ஆயுளும் முடிந்தது. இப்படி நடக்க வேண்டும் என்ற சாபம் அவர்களுக்கு இருந்தது.

எல்லோரையும் ரட்சிக்கும் கண்ணன் நினைத்திருந்தால் இந்த அழிவைத் தடுத்து நிறுத்தி இருக்கமுடியும் ஆனால் அவரே இந்த முடிவை அங்கீகரித்து விட்டதாகவே நினை.

உன் வாழ்க்கையில் எல்லா நேரங்களிலும் உனக்கு வ்ழிகாட்டிய பரமாத்மாவும் தமது கடமை முடிந்தது எனக் கருதித் தமது உலகை அடைந்து விட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியம் என்பது நட்சத்திரம். அதை கைக்குள் அடக்க முயன்றால் தோல்வி நிச்சயம். ஆனால் அதை வழிகாட்டியாகப் பின்தொடர்ந்தால் சேருமிடம் நிர்ணயம்.
– *கார்ல் ஶூஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் புத்திஜீவிகள் ஒன்றுகூடி ஆராய வேண்டும்

தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி ஒருமுகமாகக் கடிதமொன்றைத் தயாரித்து அதனை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அமையப்பெற்ற 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தவும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அந்தக் கடிதத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவிடம் கோரும்போது சமஷ்டிக் கோரிக்கை விடுபட்டுப் போகிறது என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குற்றச்சாட்டாக உள்ளது.

இந்த இடத்தில் சமஷ்டிதான் எங்களுக்கான தீர்வு. ஆனால் இப்போதிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழர் தாயகத்தில் இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புகள் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் கபளீகரச் செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியுள்ளது.

இதற்காக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்த 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதுதான் ஒரே வழி.

இதனை அடைந்து கொண்டு சமஷ்டி நோக்கிய எங்கள் பயணம் தொடரும் என்பது ஒன்றுபட்ட தமிழ்க் கட்சிகளின் கருத்தாக உள்ளது.

இந்த இடத்தில் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அதனை முழுமையாக அமுல்படுத்தினாலும் எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை. அதிகாரங்கள் ஆளுநரின் கைகளில் இருக்கும்போது நாம் எதுவும் செய்ய முடியாதென்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகவுள்ளது.

தவிர, தங்களின் இந்த நிலைப்பாட்டை முன்வைத்து எதிர்வரும் 30ஆம் திகதி பேரணி ஒன்றை நடத்துவதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இங்குதான் ஒரு பெரும் முரண்பாட்டு அரசியல் களம் நம் மத்தியில் உருவாகிறது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில், கருத்து வெளியிட்டுள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ,

"இந்தியாவின் உதவியை நாடும் தமிழர் தரப்பின் நகர்வுகள் சாதாரணமானவை அல்ல" என்று கருத்துரைத்துள்ளார்.

ஆக, ஈழத்தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு இந்தியாவின் உதவியை நாடுவது சாதாரணமானவிடயமல்ல எனத் தென்பகுதி அரசியல் தரப்பு கருதி நிற்க,

இங்கோ எதிரும் புதிருமான கருத்துக்கள் களைகட்டியுள்ளன.

பரவாயில்லை, ஒரு கருத்து எழும்போது அதற்கு எதிர்க்கருத்தும் எழவே செய்யும் என்பது இயல்பாயினும் மேற்குறித்த விடயத்தில் எழுகின்ற எதிர்க்கருத்தின் பின்விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது பற்றி எமது தமிழ்ப் புத்திஜீவிகள் – யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறையினர் ஒன்றுகூடி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவை தமிழ் மக்களுக்கு அறியத்தர வேண்டும்.

இதுவிடயத்தில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் போன்றவர்கள் முன்னின்று செயலாற்ற வேண்டும்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்புக்கூற வேண்டும்

## முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என்று முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

நல்லாட்சியின்போது ஜனாதிபதியாகச் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவே பாதுகாப்பு அமைச்சராகவும் செயற்பட்டார். எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

ஐந்தாண்டுகள் மைத்திரி ஜனாதிபதியாகச் செயற்பட்டார். அந்தக் காலப்பகுதியில் அவர் தேங்காய் துருவினாரா? நல்லாட்சியின்போது 90 வீதமான நல்ல விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சியே மேற்கொண்டது. எம்மைப் பழிவாங்கும் நோக்கிலேயே மைத்திரி தரப்பு செயற்பட்டது.

அந்த உண்மை வெளியில் வரும். அதே வேளை, மத்திய வங்கியானது எனக்குக் கீழ் இருக்கவில்லை. அரச வங்கிகள் அப்போதைய அமைச்சர் கபீர் ஹாசீம் வசம்தான் இருந்தன. எனவே, பிணைமுறி விவகாரம் தொடர்பில் அவரிடம்தான் கேட்க வேண்டும் என்றார். (ம)

# திருமணத்தில் பங்கேற்ற மணமகன் உட்பட 26 பேருக்கு தொற்று

(கொழும்பு)

மினுவாங்கொடை, கமரகொட பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களின் திருமணத்தில் கலந்து கொண்ட 26 பேருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்த திருமணத்தில் இரு தரப்பிலும் சுமார் 350 பேர் கலந்து கொண்டதாக தெரியவந்துள்ளது. முதலில் ஒரு மணமகன் உட்பட ஆறு பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதற்கமைய, கமரகொட ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்ற குறித்த திருமண விழாவில் கலந்து கொண்டவர்களில் 28 பேரை மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ரெபிட் என்டிஜென் பரிசோதனைக்கு அனுப்பியது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர்களில் 26 பேருக்கு கோவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

# புலோப்பளை கிழக்கில் வீடு ஒன்று தீக்கிரை

## மின் ஒழுக்கு என சந்தேகம்

(பளை)

புலோப்பளை கிழக்கில் வீடு ஒன்று தீக்கிரையான சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த தீ விபத்து சம்பவத்தில் வீட்டில் இருந்த பெறுமதியான சொத்துக்கள் எரிந்து சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு எரிந்துகொண்டிருந்த சமயம் பளை பொலிஸார் வீட்டினை உடைத்து தீ பரவலை கட்டுப்படுத்தினர்.

மின் ஒழுக்கு குறித்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம்என நம்பப்படுகிறது.சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** சி.இ.சி கல்உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவ, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# நாட்டில் நேற்று மேலும் 877 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 877 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள கோவிட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 602,763 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## ஆர்வம் பிறக்கட்டும்

❖ ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சுமை முழுவதும் அவரவர் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணிச் செயலாற்றுங்கள்.

❖ வேதாந்தம் கூறும் தர்மநெறி முறைகளை வீட்டுக்கு வீடு சென்று எடுத்துச் சொல்லுங்கள். ஒவ்வொருவரிடமும் இருக்கும் தெய்வீகத்தன்மையை உணர வழி காட்டுங்கள்.

❖ கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தை நாலாபுறங்களிலும் பரவ விடுங்கள். பரபரப்புடன் பணியில் ஈடுபடுங்கள். பொதுநலத்துடன் தொண்டாற்றுங்கள்.

❖ நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். நிமிர்ந்து நின்று துணிவுடன் நடை போடுங்கள்.

❖ தூய்மையுள்ளவராக நீங்கள் இருந்தால், தூய்மை இல்லாததைப் பார்க்க முடியாது. ஏனென்றால், உண்மையில் உள்ளே இருப்பது தான் வெளியிலும் நமக்குத் தெரிகிறது.

❖ [illegible] சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் [illegible] வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

61

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இதில் மஞ்சாடி என்பதும் கழஞ்சு என்பதும் இரு வகையான செடி விதைகள். குன்றிமணி எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. பண எடை என்பது அந்தக் காலத்தில் இருந்த ஒரு நாணயம்.

### நிறுத்தலளவாகு பெயர்

மீன் விற்பவரிடம், அரைக் கிலோ தாருங்கள் எனக் கேட்டாலோ, வெங்காய வியாபாரியிடம் கிலோ என்ன விலை என்று வினவினாலோ, அவை மீனையும் வெங்காயத்தையும் குறிக்கின்றனவேயன்றி நிறுத்தல் அளவான கிலோவைக் குறிப்பதில்லை என்பது வெளிப்படை. கிலோ எனப்படும் நிறுத்தலுக்கான அளவு நிறுக்கப்படுகின்ற பொருட்களுக்கு ஆகி வருவதால் நிறுத்தல் அளவாகு பெயர் எனப்படுகிறது.

**மீன் விற்பவரிடம், அரைக் கிலோ தாருங்கள் எனக் கேட்டாலோ, வெங்காய வியாபாரியிடம் கிலோ என்ன விலை என்று வினவினாலோ, அவை மீனையும் வெங்காயத்தையும் குறிக்கின்றனவேயன்றி நிறுத்தல் அளவான கிலோவைக் குறிப்பதில்லை என்பது வெளிப்படை. கிலோ எனப்படும் நிறுத்தலுக்கான அளவு நிறுக்கப்படுகின்ற பொருட்களுக்கு ஆகி வருவதால் நிறுத்தல் அளவாகு பெயர் எனப்படுகிறது.**

"நாட்டின் அரிசித் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கும் பொருட்டு பத்தாயிரம் மெற்றிக்தொன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது." என்ற செய்தியில் இறக்குமதியான பத்தாயிரம் மெற்றிக்தொன் என்ற நிறுத்தல் அளவு அரிசிக்கு ஆகி வருவதால் அது நிறுத்தலளவாகு பெயராகிறது.

கிராம் தொடங்கி மெற்றிக்தொன் வரையிலான புதிய அளவீடுகளும், அவுன்ஸ் தொடங்கி தொன் வரையிலான பழைய அளவீடுகளும், மஞ்சாடியில் தொடங்கும் தமிழர்களின் நுண் பொருட்களுக்கான நிறுவை அளவீடுகளும் தம்மைக் குறிப்பிடாமல் தம்முதவியாற் கணிக்கப்படும் பொருட்களைக் குறிப்பிடுமிடத்து அவை அனைத்தும் நிறுத்தலளவாகு பெயராகின்றன.

### கணக்கதிகாரம் - பத்தரை மாற்றுத் தங்கம்

நமது ஊர்களில் ஒரு பழஞ்சொல் உண்டு. பத்தரை மாத்துத் தங்கம். குழந்தைகளைக் கொஞ்சும் பொழுதும், ஒருவர் நல்ல குணமுடையவர் எனில், அவரை பத்தரை மாற்றுத் தங்கம் என்பார்கள். பத்தரை மாத்துத் தங்கம் என்றும் கூறுவர். மாற்று என்பது மாத்து என மருவியுள்ளது. (காற்று என்பது காத்து என்றானது போல்). சரி மாற்று அல்லது மாத்து என்றால என்ன என்று தேடினால், அதன் விடை இதுதான்.

இன்றைய கால கட்டத்தில் இதனையே மாற்றி 24 கரட் சொக்கத்தங்கம் என்பது போல் அந்தக் காலத்தில் பத்தரை மாற்றுத் தங்கம் என்று பயன்படுத்தியுள்ளனர். ஆக, மாற்று என்பது இன்றைய கரட் (Karat) என்பதற்கு நிகரான ஒரு சொல் ஆகும். ஆனால் தமிழ்க் கணித நூல்கள் படி தங்கம் என்றாலே பத்தரை மாத்துடையதுதான். அப்படிப் பத்தரை மாத்து இல்லையென்றால் அதற்குப் பெயர் வேறு. உதராணத்திற்கு எட்டரை மாற்றுடையது வராகன்.

ஒரு ஒப்பாரிப் பாடலில் இப்படி ஒரு வரி வருகின்றது:

"பத்தரை மாத்து பழிப்படா சென்றிருந்தேன்
எட்டரை மாத்து எடையும் கொறஞ்சேனுங்க
முட்டக் குடியனுக்குத் தாலிகட்டி வச்சாளே - இப்ப
முத்தத்து வேம்பானேன் முழுதும் கசப்பானேன்
சாராயங் குடிச்சுகிட்டு சாயங்கால வேளையிலே
சாஞ்சுவருவானே படிச்ச பாவி மட்ட
அரசாங்க உத்தியோகம் அம்மாவும் சொன்னாளே
ஆசப்பட்டுத் தலநீட்டி அடிகோலப் படுகேனே"

பத்தரை மாத்துத் தங்கம் என்பது சொக்கத்தங்கம் என்பதற்காகப் பயன்பட்டது. அதாவது செம்பு கலக்காத தங்கம். செம்பு கலக்காவிட்டால் மட்டுமே அது தங்கம். செம்பு கலந்து விட்டால் அது தங்கம் மற்றும் செம்பின் கலவையே, தங்கமாகா. இதனால், பத்தரை மாத்துடையதை தங்கம் என்றும் எட்டரை மாத்துடையதை வராகன் என்று வேறுபடுத்தியுள்ளனர்.

**நமது ஊர்களில் ஒரு பழஞ்சொல் உண்டு. பத்தரை மாத்துத் தங்கம். குழந்தைகளைக் கொஞ்சும் பொழுதும், ஒருவர் நல்ல குணமுடையவர் எனில், அவரை பத்தரை மாத்துத் தங்கம் என்பார்கள். பத்தரை மாத்துத் தங்கம் என்பது சொக்கத்தங்கம் என்பதற்காகப் பயன்பட்டது. அதாவது செம்பு கலக்காத தங்கம் என்று பொருள்படும்.**

பொன் மற்றும் சிறு எடை அளவுகளை கணக்கதிகாரத்தின் பின் வரும் பாடல்களில் எழுதப்பட்டுள்ளது.

**காணிரெட்டி வருபிளவு போகா திரண்டுவரில்**
**பூங்குன்றி மோகமுடன் குன்றிரண்டு - மஞ்சாடி**
**கோல வஞ்சு மஞ்சாடி யென் பது காலின் கழஞ்சு மாம்.**
**பொன்னு மிரண்டாம் பிளவு மிரண் டாங்குன்றி**
**குன்றியு மஞ்சாடி யைந்தாகும் -என்றும்**
**ஒருநாலும் ஒன்றாகும் என ஓது வாரெங்கள்**
**திருமாதே தேனே தெளி கண்ட கழஞ்சிரண்டு கைசாக்கை நாலாக்கி**
**கொண்ட பலநூறு கூறுநிறை -கண்ட**
**இரண்டு தூலமுப்ப தோடிரண்டாம் பாரம்**

**இப் பாடல்களின் கருத்து**

அதாவது, 2 நெல் கொண்டது ஒரு பிளவு, 2 பிளவு கொண்டது ஒரு குன்றிமணி, 2 குன்றிமணி கொண்டது மஞ்சாடி, 5 மஞ்சாடி கொண்டது கால் கழஞ்சு. அல்லது 20 மஞ்சாடி கொண்டது ஒரு கழஞ்சு அல்லது 160 நெல் கொண்டது.

2 கழஞ்சு கொண்டது ஒரு கஃசு (அல்லது கைசா, இது தான் பின்னர் காசு என்று மருவி இருக்கலாம்)4 கஃசு கொண்டது ஒரு பலம், நிறை என்பது 100 பலம் கொண்டது, 2 நிறை கொண்டது துலாம், துலாம் இருபது கொண்டது பாரம்.

இதன்படி பார்த்தால்

1 பிளவு = 2 நெல், 1 குன்றிமணி = 4 நெல், 1 மஞ்சாடி = 8 நெல், 1 பணம் = 16 நெல், 1 கழஞ்சு = 160 நெல்,
1 கஃசு = 320 நெல், 1 பலம்= 1280 நெல், 1 தூக்கு/நிறை = 128,000 நெல், 1 துலாம் = 256,000 நெல், 1 பாரம் = 8,192,000 நெல் எனவே 1 பாரம் என்பது 8,192,000 நெல்லின் நிறைக்குச் சமனாகும்.

செம்பு கலக்காத தங்கம் பத்தரை மாத்து என்பது போல், நல்ல குணம் மட்டுமே கொண்டு, தீய குணங்கள் ஏதுமற்றவரை, மாசு மருவற்றவரை பத்தரை மாத்துத் தங்கம் என்றழைப்பர். (நன்றி -https://tamilkanithan.wordpress.com).

இங்கு நெல் வகை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மேலும் இந்த அலகுகள் கூட இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

கழஞ்சு திரிந்து கிழிஞ்சு என்று கூறப்படுவதும் உண்டு.

கழஞ்சு திரிந்து கிழிஞ்சு என்று கூறப்படுவதும் உண்டு. உதாரணமாக "ஒரு கிழிஞ்சி நெல்லுதாறேன் பொண்ணு தாரியா சம்மந்தி" என்ற நாட்டுப்புறப் பாடல் உள்ளது. கழஞ்சு சில நேரம் அழஞ்சு என்றும் அழைக்கப்படும்.

மன்னர் ராஜராஜன், தஞ்சைப் பெரிய கோவிலுக்கு தானமாக வழங்கிய நகைகள் நிறுத்தே கொடுக்கப்பட்டன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுத்தமான பத்தரை மாற்று தங்கம் "தண்டவாணி" என்று குறிப்பிடப்பட்டது. தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டுக்களில் தங்க நகை பற்றி குறிப்பிடும் போது ஒவ்வொரு நகையும் தண்டவாணிக்கு கால் மாற்று குறைவு அல்லது ஒரு மாற்று குறைவு என்றும் கூறப்பட்டுள்ளது.

**ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுத்தமான பத்தரை மாற்று தங்கம் "தண்டவாணி" என்று குறிப்பிடப்பட்டது. தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டுக்களில் தங்க நகை பற்றி குறிப்பிடும் போது ஒவ்வொரு நகையும் தண்டவாணிக்கு கால் மாற்று குறைவு அல்லது ஒரு மாற்று குறைவு என்றும் கூறப்பட்டுள்ளது.**

மன்னர் ராஜராஜன், தஞ்சைப் பெரிய கோவிலுக்கு தானமாக வழங்கிய நகைகளை மிக துல்லியமாக நிறை பார்த்து அவற்றின் எடை என்ன? அவை என்ன வகையிலான நகைகள்? அவற்றில் கோர்க்கப்பட்ட முத்து எந்த வகையைச் சேர்ந்தது என்ற எல்லா விபரங்களையும் கல்வெட்டாக எழுத உத்தரவிட்டார்.

இந்த கல்வெட்டு விபரங்கள் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்கானவை அல்ல. தன்னைப் போல மற்றவர்களும் வழங்கும் தானங்கள், எந்தவித சந்தேகத்துக்கும் இடம் இல்லாமல் கணக்கு விபரம் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகத் தான் இந்தமுறையை மன்னர் ராஜராஜன் கையாண்டார்.

தங்க நகைகளை நிறுத்து அட்டவணையிடும் போது, அந்த நகையில் உள்ள அரக்கு, செப்பாணி (செம்பு ஆணி), சரடு (கயிறு), சட்டம், பிஞ்சு நீங்கலாக எவ்வளவு தங்கம் உள்ளது என்று குறித்து இருக்கிறார்கள்.

அந்த நகையில் முத்து போன்ற நவமணிகள் பதித்து இருந்தால், அவற்றின் எடை என்ன? அவற்றின் தன்மை என்ன? அந்த நகையின் மதிப்பு எத்தனை காசு? என்ற எல்லா விபரங்களும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில்...

அரசடி புகையிரதக் கடவைக்கும் சங்கத்தானை புகையிரதக் கடவைக்கும் இடைப்பட்ட பாதுகாப்பற்ற தண்டவாளப் பகுதியை கடக்க முற்பட்ட மாணவனை கொழும்பில் இருந்து வந்த கடுகதிப் புகையிரதம் மோதியதில் மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தண்டவாளப் பகுதிக்கு அப்பால் உள்ள கடைக்கு சென்றுவிட்டு தண்டவாளத்தைக் கடந்த மாணவன் மீண்டும் கடையில் தவறவிடப்பட்ட தனது பொருள் ஒன்றினை எடுப்பதற்காக தண்டவாளத்தைக் கடந்தபோது ரயில் மோதித் தள்ளியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்விகற்கும் கொடிகாமம் இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் பானுசன் (வயது-18) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் இன்றையதினம் பாடசாலையில் நடைபெறும் (சோர்சல்) நிகழ்வுக்கு ஆடைகளை தைக்கச் சென்றபோதே இவ்அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ம -18,30,33)

## 14 பேர்...

ழந்துள்ளவர்களில் 08 ஆண்களும் 06 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,299 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இளைஞன்...

டுள்ளார்.

இதில் மல்லாவி தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த கணேசன் புஸ்பராஜ் (வயது-23) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

## நாட்டில்...

ங்கை மத்திய வங்கியினால் கொழும்பு துறைமுகத்தில் உள்ள இரண்டு எரிபொருள் தாங்கிகளுக்கு 93 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்படவுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

37,500 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 35,000 மெட்ரிக் தொன் பெட்ரோலைப் பெறுவதற்காக இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படவுள்ளது. (ம)

## எந்த தேர்தல்...

நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"மக்களைப் பாதுகாப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று எல்லா வழிகளிலும் மக்களை வதைக்கின்றனர்.

சந்தைக்குச் சென்றால், பொருட்களின் விலைகள் உச்சம். இதயம், வயிறு என எல்லாம் எரிகின்றது. வாழ்வதற்கு உரிய வழி இல்லை. எமது ஆட்சியின் கீழ் சிறந்த நிலைமையை உருவாக்குவோம். 'டீல்' அரசியலுக்கு இடமில்லை.

சுரண்டிப் பிழைப்பவர்களுக்கும் வாய்ப்பு இல்லை. மக்களுக்கான அரசியலே நடத்தப்படும். தேசிய கொள்கையை முன்னிறுத்தி நடவடிக்கைகள் இடம்பெறும். தனிநபர் செல்வாக்குக்கு இடமில்லை" என்றார். (ம)

## வடக்கு-கிழக்கு...

றுக்கொண்டதிலிருந்து இந்தியாவுடனான நல்லுறவு தொடர்பில் உன்னிப்பாக அவதானம் செலுத்தி வந்திருக்கின்றார் என்று தெரிவித்துள்ள அவர், இருநாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றுவதுடன் இருநாடுகளின் பொருளாதாரங்களுக்கு இடையிலான தொடர்பு மேலும் வலுவடையவேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம்என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## பெற்றோல்...

இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து சேதப்படுத்தியதோடு. வீட்டுக்குள் பெற்றோல் குண்டு வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமாகியதுடன் வீட்டின் உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-[illegible])

## மோ.சைக்கிள்...

மோட்டார் சைக்கிளிலிருந்து திறப்பு எடுக்காத நிலையில் குறித்த மோட்டார் சைக்கிளை யாருக்கும் தெரியாத நிலையில் மாணவன் ஓட்டிச்சென்ற நிலையில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## சுன்னாகத்தில்...

இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் ராசா ரவிச்சந்திரன் என்ற 50 வயது மதிக்கத்தக்கவரே உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் மதுபானசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தென்மராட்சியைச் சேர்ந்த இருவர் கொள்ளையிட்டு தப்பித்ததை மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் கண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் உள்ளிட்டோர் துரத்திச் சென்ற நிலையில் கொள்ளையர் பயணித்த மோட்டார் சைக்கிள் சுன்னாகம் சந்தி வீதி சமிக்ஞை விளக்கு பகுதியில் எதிரே வந்தவரை மோதித்தள்ளியது.

சம்பவ இடத்திலேயே அதிக குருதிப் போக்கு ஆன நிலையில் அவர் உயிரிழந்தார்.

கொள்ளையர்கள் இருவரும் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,33)

## 13 ஆ...

இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"இதனை விடுத்து, 1988 ஆம் ஆண்டு 13இற்கு அப்பால் செல்வது அல்லது சமஷ்டிக்கு செல்வது என்றில்லாமல், தற்போது அரசியல் அமைப்பில் அடங்கியுள்ள 13ஆவது அரசியலமைப்பு தொடர்பில், விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ பொது உடன்பா

## ஓமிக்ரோன் அலை உருவாகும்

### எச்சரிக்கை விடுப்பு

நாட்டில் நிச்சயமாக ஓமிக்ரோன் திரிபு அலையொன்று உருவாகும் என களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் டொக்டர் அர்ஜூன டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியளவில் இந்த ஓமிக்ரோன் அலை உருவாகும் சாத்தியங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல நாடுகளில் ஓமிக்ரோன் அலை உருவாகியுள்ளதாகவும், இலங்கையிலும் இவ்வாறான அலை உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோய்த் தொற்று பரவுகையை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பாக மூன்றாம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

ட்டை எட்டவேண்டும்.

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தம் பிரச்சினையாக்கப்பட்டால் அதன்மூலம் நாடு இன்னும் வீழ்ச்சியடையும். எனவே இந்த விடயத்தில் ஓரிணக்கத்துக்கு வரவேண்டும்" என்றார். (ம)

### மெகா பவர்

திகதி 24/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1005
வெற்றி எழுத்து B; வெற்றி இலக்கங்கள் 15 | 22 40 46 65

### செவன

திகதி 24/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 349
ஆங்கில எழுத்து N; வெல்லப்பட்ட இலக்கங்கள் 50 64 71 73

### மஹஜன சம்பத

திகதி 2022/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 4657
ஆங்கில எழுத்து J; வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 9 4 8 6 1

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2952
ஆங்கில எழுத்து I; வெற்றி இலக்கங்கள் 07 46 72 78

### தன நிதானய

திகதி - 2022.01.24
சீட்டிழுப்பு இலக்கம் - 687
ஆங்கில எழுத்து R; வெற்றி இலக்கங்கள் 30 42 57 66

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1687; திகதி 2022.01.24
ஆங்கில எழுத்து A; வெற்றி இலக்கங்கள் 30 65 75 97

### அத கோடிபதி

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1460
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 24.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,904,500
வெற்றி இலக்கங்கள் 13 24 64 72; ஆங்கில எழுத்து E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3795
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 24.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,818,620
வெற்றி இலக்கங்கள் 02 17 28 74; ஆங்கில எழுத்து Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### 12 சம்பத

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 25 | 31 52 53 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 206,862,601/-
சீட்டிழுப்பு வாரம் 810; வர்ணம் இள நீலம்; திகதி 2022.01.24 திங்கட்கிழமை
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 24.01.2022; வெற்றி வாரம் 3346; வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 05 36 42 46 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,601,980/=

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1634; நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 24.01.2022; தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 04 46 63 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 56,040,196/=

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1805; சீட்டிழுப்பு திகதி 24.01.2022
வெற்றி இலக்கங்கள் 04 05 15 26; ஆங்கில எழுத்து E
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 30,272,912/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9831)

**076 825 7716 (ஆகாஸ்)**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3577)

**0768226240** DHL


## தொட்டிக்குள் விழுந்தவர் பலி

(புத்தளம்)

புத்தளம் - ஆராச்சிக்கட்டுவப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஆனை விழுந்தான் பகுதியிலுள்ள இறால் பண்ணை நீர்தொட்டிக்குள் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பத்துளுஓயா - மகாமாலிய பகுதியைச் சேரந்த 51 வயதுடைய இரண்டுப் பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குறித்த நபர் நேற்று காலை இறால் பண்ணையில் இறால்களுக்கு காலை நேர உணவை வீசிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த நபர் இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்த இறால் பண்ணையின் உரிமையாளர், இது தொடர்பாக ஆராச்சிகட்டுப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தார். (ம)


**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 14 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)

தொடர்பு:-

**077 658 5999** (9829)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

(C-3578)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30. வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 15'000/-**

பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரத்தில் இயங்கும்
NGC நிறுவனத்துக்கு

- அலுவலக உதவியாளர் (பெண்) (மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்)
- வெளிக்கள உத்தியோகத்தர்கள் (ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்புகளுக்கு:-

**077 922 7102** (C-3620)

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் 36 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை - 3.5 லட்சம்**

(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்)

15 அடி பாதையுடன், காபற் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு

(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 Km தூரம்)

(அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனி முன்வீதியில்) (9828)

தொடர்பு:- **076 890 9259, 077 015 0353**


### கொக்குவில் நந்தாவில்

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

### பிரேரணைகள்

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியளவில் நடைபெற இருப்பதனால் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் பிரேரணைகளை 10.02.2022ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தலைவர் / செயலாளர்
பரிபாலன சபை,
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நந்தாவில், கொக்குவில்.

(9806)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 6 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.
வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 3.5 இலட்சம்.

**077 288 0152** (9830)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (9824)

**077 814 7389, 077 614 7333**


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 14 . 10 . 1967 |  | 24 . 01 . 2022 |

### திருமதி இராஜமோகன் கமலாதேவி

புத்துவெட்டுவானைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜமோகன் கமலாதேவி அவர்கள் நேற்று (24.01.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் குலசிங்கம் - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும் குலவீரசிங்கம் இராஜமோகனின் ஆருயிர் மனைவியும் சுரேன், பாரத், கிசான், கிசாத், கேமிஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜென்சியின் அன்பு மாமியாரும் மேனுகனின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற ஜெயந்தினி, ஜெயாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் நிர்மலாதேவி, விக்னராஜா (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), அம்பிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2022) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]

(C-3622) 077 881 [illegible]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதவான் J.P

### திருமதி ஜெயதேவி ஸ்ரீஸ்கந்தராஜா

(அதிபர் - யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்)



எமது பாடசாலை முதல்வர் திருமதி ஜெ.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் 24.01.2022 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றின் நீதவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையை முன்னிட்டு பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை நலன்புரிக் கழகம்
(யா/வேலணை கிழக்கு
மகா வித்தியாலயம்) (9818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.